

விக்கிரவாண்டி தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு ஆதரவாக – கழக துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் பொதுமக்களைச் சந்தித்து தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுடன் சிவகங்கை மாவட்டக் கழக முன்னோடிகள் – பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, சாக்கோட்டை மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆனந்த் உள்ளிட்டோரும் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி குண்டலபுலியூரில் வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், தா.மோ.அன்பரசன் ஆகியோர் வாக்குச் சேகரித்தனர். உடன் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., ஒன்றியச் செயலாளர் வேம்பி ஜெ.ரவி, கண்டமனூர் பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், பி.செல்வராஜ், பேரூர் செயலாளர் கே.பி.எஸ்.பழனியப்பன், கிளைச் செயலாளர் சிவகொழுந்து, வி.சி.க. செயலாளர்கள் பிரகாஷ், ராஜ்கமல், காங்கிரஸ் மாசிலாமணி ஆகியோர் பங்கேற்றனர்.

### உ.பி.யில் சாமியார் பிரசங்கக் கூட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் பலி!

# பாதிக்கப்பட்டவர்களுக்கு ராகுல் காந்தி ஆறுதல்!

## அனைத்து உதவிகளும் கிடைக்க உறுதி!

ஹத்ராஸ், ஜூலை 6-

ஹத்ராஸ் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கூடுதல் நிவாரணம் உடனடியாக வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்த பின்னர் உத்தரப்பிரதேச அரசுக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் கடந்த 2 ஆம் தேதி, போலே பாபா சாமியார் நடத்திய பிரசங்க கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 121 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி நேரில் சந்தித்தார்.

டெல்லியில் இருந்து சாலை வழியாக ஹத்ராசில் உள்ள புல்ராய் கிராமத்திற்கு சென்ற ராகுல், பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்குச் சென்று ஆறுதல் கூறினார். அப்போது காங்கிரஸ் சார்பில் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நீதி கிடைக்க காங்கிரஸ் உறுதியாக போராடும் என ராகுல் காந்தி தெரிவித்தார்.

### திராவிட இயக்க தீரர் –

# இராசிபுரம் கே.ஆர் (எ) கே. இராமசாமி 23 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## எம்.பி.க்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வி.எஸ்.மாதேஸ்வரன் மலரஞ்சலி செலுத்தினர்!

நாமக்கல், ஜூலை 6-

நாமக்கல் மாவட்டம், திராவிட இயக்க தீரர் நினைவில் வாழும் இராசிபுரம் கே.ஆர் (எ) கே.இராமசாமி அவர்களின் 23 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (5.7.2024 வெள்ளிக்கிழமை) மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ராசிபுரம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அலுவலகத்தில் நடைபெற்றது.

பொதுவாழ்வில் தூய்மை என்பதை தன் பிறப்பிலே பெற்றவர் இராமசாமி என்று தந்தை பெரியார் அவர்களும், கழகத்திற்கு பெருமை சேர்ப்பவர் இராமசாமி என்று பேரறிஞர் அண்ணா அவர்களும், பதவி பெரிதல்ல கொள்கைதான் பெரிது என்று வாழ்ந்து மறைந்தவர் இராமசாமி என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இராமசாமி எனக்கு நண்பர் என்று சொல்வதில் எனக்குப் பெருமை என்று இனமான பேராசிரியர் அவர்களும், என்னைப் போன்று பல எளிய குடும்பத்தைச் சேர்ந்த கிராமப் புற மாணவர்களை மருத்துவர்களாக ஆக்கிய உத்தமர் என்று கோவை, ஜெம் மருத்துவமனை, டாக்டர் பழனிவேல் ஆகியோர் புகழ்ந்துள்ளனர்.

1968 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களிடமிருந்து சிறந்த கூட்டுறவு வங்கித் தலைவர் விருதும், 1999 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களிடமிருந்து மாநில சிறந்த கூட்டுறவாளர் விருதும், இராசிபுரம் ஒன்றிய தி.மு.க. செயலாளராகவும், நாமகிரிப்பேட்டை ஒன்றிய தி.மு.க. செயலாளராகவும், தலைமைச் செயற்குழு, மற்றும் பொதுக்குழு உறுப்பினராகவும் 1962 முதல் 2000 வரை இராசிபுரம் கூட்டுறவு நில வள வங்கித் தலைவர், தமிழ்நாடு மாநில கூட்டுறவு நில வள வங்கிப் பெருந்தலைவர் என பல பொறுப்புகளை வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இராசிபுரம் கே.ஆர் (எ) கே.இராமசாமியின் பேரன் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமாக கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் இருந்து வருகிறார்.

திராவிட இயக்க தீரர் நினைவில் வாழும் இராசிபுரம் கே.ஆர் (எ) கே.இராமசாமி அவர்களின் 23 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (5.7.2024 வெள்ளிக்கிழமை) மலர் தூவி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ராசிபுரம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமகிரிப்பேட்டை ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி.இராமசுவாமி, ராசிபுரம் நகர கழக செயலாளர் என்.ஆர்.சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கே.ஆர் (எ) கே.இராமசாமி அவர்களின் திருவுருவப் படத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், வங்கி செயலாளர் கோவிந்தராஜ், வங்கித் தலைவர் கந்தசாமி ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் திமுக நிர்வாகிகள், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின்

# உள்நாட்டு உற்பத்தி ரூ.31.55 லட்சம் கோடியாக அதிகரிக்கும்!

சென்னை, ஜூலை 6-

நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி 31.55 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் 4வது மிகப்பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. நாட்டிலேயே தொழில்துறையில் முதலிடம் வகிக்கும் மாநிலமாக திகழும் தமிழ்நாடு, ஆட்டோமொபைல், வாகன உதிரிபாகங்கள், மருத்துவம், ஜவுளித்தொழில், தோல் பொருட்கள், ரசாயன உற்பத்தி என பலதரப்பட்ட தொழில் சார்ந்த ஏற்றுமதி மற்றும் இறக்கு மதியில் முக்கிய அங்கம் வகிக்கிறது. அந்தவகையில் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற கடந்த 3 ஆண்டுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களது புதிய மற்றும் விரிவாக்க திட்டத்திற்கான முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொண்டுள்ளன.

2030க்குள் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதாரமாக மாற்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொலைநோக்கு சிந்தனைகளுடன் செயல்படுத்தி வரும் பொருளாதாரம் சார்ந்த முன்னெடுப்புகள் தொழில்துறையில் பல்வேறு சாதனைகளை படைத்து வருகின்றன. நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளை கொண்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்கு கிறது. 2022-23ம் நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 7.24 சதவீதமாக இருந்த நிலையில், தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி 8.19 சதவீதமாக இருந்தது. அதாவது தேசிய சராசரியை விட தமிழ்நாட்டின் உற்பத்தி விகிதம் அதிகரித்தது. கடந்த 2023-24ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி 28.3 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது. இந்நிலையில், 2024-25ம் நிதியாண்டில் தமிழ்நாட்டின் உள்நாட்டு உற்பத்தி 31.55 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### இங்கிலாந்தில்

# தொழிலாளர் கட்சி ஆட்சியைப் பிடித்தது!

## 14 ஆண்டுகால கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி முடிவிற்கு வந்தது!

லண்டன், ஜூலை 6-

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று தொழிலாளர் கட்சி ஆட்சியை பிடித்துள்ளது. பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது.

பிரிட்டனில் மொத்தமுள்ள 650 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிந்ததும் வாக்குகள் எண்ணும் பணிகள் தொடங்கின. இறுதி கட்ட வாக்கு எண்ணிக்கை நடந்து வரும் நிலையில், முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 400க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித் துள்ளது. 14 ஆண்டுகளுக்கு பிறகு தொழிலாளர் கட்சி பிரிட்டனில் ஆட்சியமைக்கிறது. அக்கட்சியின் தலைவர் கீர் ஸ்டார்மர் பிரிட்டனின் புதிய பிரதமராக பதவியேற்க இருக்கிறார்.

தற்போதைய பிரதமர் ரிஷி சுனக்கின் கன்சர்வேட்டிவ் கட்சி பிரிட்டன் பொதுத்தேர்தல் வரலாற்றில் மோசமான தோல்வியை சந்தித்துள்ளது. அக்கட்சிக்கு 119 இடங்கள் மட்டுமே கிடைத்துள்ளன. படுதோல்விக்கு முழு பொறுப்பேற்பதாக அக்கட்சியைச் சேர்ந்தவரும், பிரதமருமான ரிஷி சுனக் தெரிவித்துள்ளார். வெற்றி பெற்றுள்ள தொழிலாளர் கட்சிக்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வந்த கன்சர்வேட்டிவ் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. பலராமன்

**ஜூலை 6 (2015)**



திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஒன்றியச் செயலாளராக நான்கு முறையும், பொதுக்குழு உறுப்பினராகவும், மாவட்டப் பொருளாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

கொருக்காத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக நான்கு முறையும், செய்யாறு ஒன்றிய துணைத் தலைவராகவும், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினராகவும், ஒன்றியக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### செம்மொழிப் பூங்காவில் உணவுத் திருவிழா!

சென்னை, ஜூலை 6 -

சென்னை செம்மொழி பூங்காவில் 'ஊரும் உணவும்' என்ற பெயரில் புலம் பெயர்ந்தவர்களின் உணவுத் திருவிழாவை தி.மு.க. எம்.பி.க்கள் கனிமொழி, கலாநிதி வீராசாமி உள்ளிட்டோர் தொடங்கி வைத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி ஒவ்வொரு அரங்கையும் பார்வையிட வேண்டும் என்று புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் கோரிக்கை வைத்தனர்.

புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் கோரிக்கை ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு அரங்கையும் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, கலாநிதி வீராசாமி ஆகியோரும் பார்வையிட்டனர்.

### மதுரை மாநகர் மாவட்டம்

## கோ.புதூர் பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், கோ.புதூர் பகுதிச் செயலாளர் அ.கிருஷ்டிஜீவன் அவர்கள்மீது, நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக **என்.எம். புண்ணியமூர்த்தி**, (மணவாளர் நகர், செல்லூர், மதுரை 625 014.) அவர்கள் கோ.புதூர் பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 05.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சுகுமார் சுப்பிரமணியன்

**ஜூலை 6 (2020)**



பேரறிஞர் அண்ணா அவர்களுடன் நெருங்கி பழகிய கெங்காதரனின் மகனான இவர், இளமைக்காலம் முதலே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதி – ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டப் பொருளாளர் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர், பொருளாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தனது குடும்பத்தில் நடைபெற்ற அனைத்து மண விழாக்களையும் சீர்திருத்தத் திருமணமாக முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் மற்றும் கழகத் தலைவர் ஆகியோரின் தலைமையில் நடத்தியவர். அத்துடன் தனது குடும்பத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் தமிழ்ப் பெயரை சூட்டியவர்.

வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2003ஆம் ஆண்டு தேர்தல் நிதி திரட்டும் பணியில் காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கியதில் மாவட்டச் செயலாளருடன் இணைந்து மாவட்டப் பொருளாளராக பணியாற்றி பாராட்டைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**